நாள் -06.07.2023

**C.C. No**.133/2021

**எ.மா.சா.1-வடிவேல், த/பெ. சுப்ரமணியம்.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** $7^{th}$ **day of July** 2023.

**குறுக்கு விசாரணை**

1. நான் டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறேன். அதை தவிர்த்து வேறு எந்த தொழிலும் நான் செய்யவில்லை. பொதுவாக சீட்டு கம்பெனியில் சீட்டு போடும்போது பதிவேடு ஒன்று வழங்குவார்கள் என்றால் சரிதான். 2012 ம் வருடம் நான் பல்லடம் சிட் பண்டில் சீட்டு போட்டதற்கு அவ்வாறு அட்டை வழங்கினார்களா என்றால் வழங்கினார்கள். ஆனால் கணக்கு பார்க்க வேண்டும் கூறி மீண்டும் 2015 ம் வருடம் திரும்ப பெற்று கொண்டார்கள்.

2. பொதுவாக அவ்வாறு அட்டையை திரும்ப பெறும் போது அதற்கு ஒப்புகை சீட்டு வழங்குவார்கள் என்றால் அவர்கள் எனக்கு வழங்கவில்லை. நானும் கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்படி விபரங்களை நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையிலும் மேற்படி விபரத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் சீட்டு போட்டதை கூறியுள்ளேன்.

3. நான் வழக்கிற்காக அட்டையை திரும்ப பெற்று சென்று விட்டார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 20 மாத சீட்டு போட்டேன். நான் மாதமாதம் பணம் செலுத்தியதற்கான ரசீது வைத்துள்ளேனா என்றால் தினசரி தவணை பெற்று செல்வார்கள். அதற்கு ரசீது வழங்கவில்லை. மொத்தமாக வரவு வைப்பதாக கூறினார்கள். ரசீது யாருக்குமே வழங்கவில்லை.

4. பொதுவாக ஏலத்தில் எடுக்கும் சீட்டு தொகையினை வங்கி கணக்கில் தான் மாற்றம் செய்வார்கள் என்றால், அது எனக்கு தெரியாது. ஆனால் அவர்கள் ரொக்கமாக தான் கொடுப்பார்கள். நான் சீட்டினை 2012 ம் வருடம் 5 ம் மாதம் எடுத்தேன். 5 லட்சம் ரூபாய் சீட்டில் ரூ.1,75,000/- கழித்தது போக ரூ.3,25,000/- ரொக்கமாக பெற்றேன். மேற்படி பணத்தை என்னுடைய வருவானவரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் அந்த சமயத்தில் எனக்கு வருமானவரி கணக்கு இல்லை.

5. 2010 ம் ஆண்டு முதல் வருமானவரி செலுத்தி வருகிறேன். மேற்படி பணத்தை கையில் ரொக்கமாக பெற்றதால் வருமானவரி கணக்கில் காண்பிக்கவில்லை. சீட்டு தவணை தொகையை 2015 ம் வருடம் திருப்பி செலுத்தி முடித்தேன். உண்மையில் சீட்டு

தொகைக்காக காசோலையை கொடுத்திருப்பேனாயானால் தவணை தொகையை திருப்பி செலுத்தி முடித்தவுடன் காசோலையை திரும்ப பெற்றிருப்பேன் என்றால் காசோலையை திருப்பி கேட்டபோது தான் என்னுடைய அட்டையை கணக்கு பார்க்க வேண்டும் என்று கூறி பெற்று சென்றவர்கள் திருப்பி தரவேயில்லை. மேலும் கூடுதல் வட்டி செலுத்தினால் தான் திருப்பி கொடுப்பேன் என்று கூறிவிட்டார்கள்.

6. 2015 முதல் 2019 ம் வருடம் வரை ஒவ்வொரு மாதமும் என்னை அழைத்து கூடுதல் வட்டி கேட்டார்கள். என்னை பழனிசாமி தொலைபேசியில் அழைத்தற்கான தொலைபேசி எண் பதிவுகள் என்வசம் உள்ளது. அதை நான் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு தொலைபேசியில் அழைக்கவில்லை என்றாலும் அதனால் என்வசம் பதிவுகள் இல்லாதததால் தான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. 2012 ம் வருடம் செப்டம்பர் மாதம் என்னுடைய வங்கி கணக்கினை தொழில் நலிவடைந்ததன் காரணமாக வங்கியே கணக்கை முடித்துவிட்டது (Non perferming Account). உண்மையில் வங்கி கணக்கு முடிக்கப்பட்டிருந்தால் திருப்புதல் குறிப்பாணையானது வங்கி கணக்கு முடிக்கப்பட்டு விட்டது என்று தான் திருப்பபட்டிருக்கும் என்றாலும் போதுமான பணம் இல்லை என்று திருப்பப்பட்டிருக்காது என்றால் சரியல்ல.

8. கண்காணிப்பு கேமரா பதிவினை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, அது இணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. என்னுடைய வீட்டில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே என்னால் தாக்கல் செய்திருக்கலம் என்றால் 15 நாட்களுக்குள் தான் எடுக்க இயலும். அதற்கு பின்னர் நீதிமன்ற உத்தரவின் பெயரில் தான் பெறஇயலும். வழக்கிற்காக கண்காணிப்பு கேமராவில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. அதிக வட்டி கேட்டது குறித்து வழக்கறிஞர் அறிவிப்பு அல்லது புகார் அளித்துள்ளேனா என்றால் அளிக்கவில்லை. காசோலையை திரும்ப கோரி உரிமையியல் வழக்கும் தாக்கல் செய்யவில்லை. பல்லடம் சிட் பண்டுடன் எனக்கு எவ்வித பரிவர்த்தனையும் செய்யவில்லை என்றாலும் அவ்வாறு செய்திருப்பேனால் காசோலையை திரும்ப பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல, ஆதாரம் உள்ளது.

10. கடனுறுதி சீட்டு மற்றும் காசோலையை பல்லடம் சிட் பண்டில் இருந்ததால் தான் உரிமையாளரின் மகனான பிரதீப் நிரப்பியுள்ளார். மேலும் தொலைபேசியில் மாதம் தோறும் அழைத்ததற்கான பதிவு உள்ளது. எனக்கு எதிராக பல்லடம் நீதிமன்றத்தில் என்

மச்சினர் நாரயணமூர்த்தி தாக்கல் செய்த வேறொரு காசோலை வழக்கும் நிலுவையில் உள்ளது. நாரயணமூர்த்தி தாக்கல் செய்த காசோலை எண்.000211 என்றால் சரிதான். மேற்படி வழக்கு 2022 ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

11. 2013 ம் வருடம் நான் காசோலைகளை வங்கியில் திருப்பி கொடுத்திருப்னேயானால் வழக்கு காசோலை மற்றும் காசோலை எண்.000211 திருப்பி கொடுத்திருப்பேன் என்றாலும் நான் சாட்சியம் அளித்த போல் மேற்படி இரு காசோலைகளையும் திருப்பி செலுத்தவில்லை என்றால் எந்த காசோலையிலிருந்து திருப்பி கொடுத்தேன் என்று நான் எங்கும் கூறவில்லை.

12. வழக்கறிஞர் அறிவிப்பினை 30.12.2020 ம் தேதியன்று பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளித்திருப்பது போன்று அந்த காலக்கட்டம் ஊரடங்கு அமலில் இருந்த காலக்கட்டத்தில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருக்க இயலாது என்றால் சரியல்ல. பொன்னம்மாள் படுத்த படுக்கையாக இருக்கும் விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, கவுன்சிலர் தான் கூறினார்.

13. பொன்னம்மாள் இன்றைய தேதி வரை ஆரோக்கியமாக உள்ளார் என்றாலும் வழக்கிற்காக படுத்த படுக்கையாக இருப்பதாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல, என்னிடம் கூறியதை தான் நான் கூறினேன். உண்மையில் சீட்டு போட்டிருக்கும் பட்சத்தில் அது குறித்த விபரங்கள் சீட்டு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் அது எனக்கு தெரியாது.

14. நான் பொன்னமாளிடம் பெற்ற தொகைக்கு தான் வழக்கு காசோலை வழங்கினேன் என்றால் சரியல்ல. லட்சுமி டெக்ஸ்டைல்சின் சின்னசாமியை எனக்கு தெரியும்.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2023.07.07 17:21:26 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**